உ
சிவமயம்

# சிட்னி முருகன் கோயில் வரலாறு
# HISTORY OF SYDNEY MURUGAN TEMPLE

திரு. து. பவராஜா

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே

என்று சிட்னி முருகப்பெருமானின் திருப்பொற்பாதங்களைப் பணிந்து அவன் வைகாசிக்குன்றில் கோயில் கொண்ட வரலாற்றினை மெய்மை குன்றாது சுருக்கமாக உரைப்பதற்கு அவன் துணை நிற்பான் என்னும் நம்பிக்கையில் இதனை எழுத விளைகின்றேன்.

## சிட்னி நகர்ச் சைவர்களின் சிந்தை கவர்ந்த வைகாசி விசாகன்

அருவமு முருவுமாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்.....என்று முருகன் அடியார்கள் பாடி மகிழ்வது வழக்கம். சிட்னிவாழ் சைவர்களோ முருகப்பெருமான் தமக்கு அருள்பாலிக்க சிட்னிக்கே வந்துவிட்டான் என்று ஒரு மாபெரும் விழாவை எடுத்தனர். ஆம், 1986ம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி பேர்வூட் மசோனிக் மண்டபத்தில் முதன் முறையாக கொண்டாடிய வைகாசி விசாக விழாவே அது. அடியார்கள் முருகப் பெருமான் உதித்த நாளை நினைவு கூர்ந்தும், அவனைத் தொடர்ந்தும் வழிபடவும் எண்ணினர். காலடியில் இல்லாவிட்டாலும், கனதூரம் செல்லாமல், காரில் ஓடிச் சென்றாவது வழிபட சுற்றுவட்டாரத்தினுள் ஒரு கோயில் இல்லாத நிலையில், அன்று அம்மண்டபத்தில் வாழை மரங்கள், தோரணங்கள், மாவிலைகள் அசைந்தாட, மங்கல விளக்குகளும் மின்விளக்குகளும் விண்மீன்கள்போல் கண்சிமிட்டி ஒளியூட்ட, வாசனைத் திரவியங்களின் நறுமணம் மண்டபம் முழுவதும் நிரம்பியிருக்க, வண்ணமலர் மாலைகளின் அலங்காரப் பின்னணியில் பாலமுருகன் கோல எழில் காட்டி எழுந்தருளினான். அவ்விழாவிலே தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை முதல் ஸ்ரத்பீல்ட் மகளிர் உயர் பள்ளியில் முருகவழிபாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அன்று சிட்னி நகர்ச் சைவர்களின் சிந்தை கவர் கள்வனாகி, அவர்கள் உள்ளமதில் குடிகொண்ட சிட்னி முருகன் எதிர்காலத்தில் தான் வைகாசிக் குன்றில் நிரந்தரமாக குடியேறப் போகின்றேன் என்பதை மறைமுகமாக உணர்த்துவதற்கே தனக்கு வைகாசி விசாகவிழா எடுக்கச் செய்தான் என்னும் எம்பெருமானின் திருவிளையாடலையும், திருவருட் கருணையையும் யாருமே அன்று புரிந்துகொள்ளவில்லை.

## தேமதுரத் தமிழ்த் தெய்வ வழிபாடு

வைகாசி விசாக விழாவில் வழிபட்ட முருகன் திருவுருவச்சிலை சி. தணிகை ஸ்கந்தகுமார் அவர்களுக்குச் சொந்தமானதாகும். அதனை அவர் 1983ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து வரவழைத்திருந்தார். 30.5.1986 வெள்ளிக்கிழமை

வாராந்த முருகவழிபாடு ஸ்ரத்பீல்ட் மகளிர் உயர் பள்ளியில் ஆம்பமாகியது. அன்று முதல் வாராந்த பூசைகளை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பத்தினர் தவறாது பொறுப்பு எடுத்து செய்து வந்தனர். பின்னர் அவர் முருகன் திருச்சிலையை சைவ மன்றத்திற்கு அன்பளித்தார். இதனையும், அவர் வாராந்த வழிபாடுகளின் போது ஆற்றிய சேவையையும் முருகன் அடியார்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

இரவு ஏழு முப்பது மணிக்கு குழந்தைகளுக்கு சமயவகுப்பும், பெரியவர் களுக்கான சமயக் கலந்துரையாடலும் ஆரம்பமாகும். எட்டு மணிக்கு கூட்டு வழிபாடு ஆரம்பமாகும். இதன் பின்னர் அன்று பூசை செய்யும் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது இருவர் முருகன் திருவுருவச் சிலைக்கு மலர் தூவ இனிய தமிழில் முருகன் நூற்றியெட்டு நாமப் போற்றியை எல்லோரும் கூறுவர். பின்பு இக்குடும்பத்தில் ஒருவர் மங்கள தீபாராதனை காட்ட எல்லோரும் ஆறிரு தடந்தோள் வாழ்க என்னும் பாடலைப் பாடுவார்கள். கந்தனுக்குக் காட்டிய தீபத்தை வணங்கி, விபூதி சந்தனம் பெற்றபின், சிறுவர்களின் திருமுறைப் பாடல்கள், பேச்சுக்கள் என்பன இடம்பெறும். பெரியவர்களின் சமயச் சொற்பொழிவுகளும் அவ்வப்போது இடம்பெற்று வந்தன. அருளமுது வழங்கலுடன் மாலை நிகழ்ச்சிகள் நிறைவெய்தும். இவ்வழிபாட்டின் போது குடும்பத்தில் குழந்தைகளும் பெரியவர்களும் ஒன்றாக இணைந்து முழுமையான ஈடுபாட்டுடன் பூசை செய்து ஆனந்த மயமான திருப்தியை அடைந்தனர்.

## சைவமன்றத்தின் தோற்றம்

முருகனை வழிபட வசதி செய்யும் வகையில் ஓர் அமைப்பினை சிட்னியில் ஏற்படுத்த எண்ணிய கலாநிதி இராசு வடிவேல், 1985ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் கழகங்கள் பதிவு ஆணையாளரிடம் 'சைவமன்றம்' என்னும் பெயரை முன்பதிவு செய்து வைத்தார். சைவமன்றத்தின் ஐந்து ஆரம்ப நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் இதனை ஒரு கழகமாக பதிவு செய்யக் கோரும் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்கள். கலாநிதி இராசு வடிவேல், திரு. க. சந்திரன், திரு. சி. தணிகைஸ்கந்தகுமார், திரு. ஆ. பகீரதன், ஆகியோருடன் சேர்ந்து இறைபணியில் கலந்து கொள்ள அருள் புரிந்த முருகவேளின் கருணையை நாம் என்றும் மறவோம். சைவமன்றத்தின் முதலாவது தலைவரான கலாநிதி இராசு வடிவேல் அவர்கள் மன்றத்தின் யாப்பினையும் நிர்வாக நடைமுறை விதிகளையும் தயாரிப்பதில் முக்கிய பங்கேற்று மன்றத்திற்கு உறுதியான ஓர் அடித்தளம் அமைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. மேன்மைகொள் சைவநீதி சிட்னியில் விளங்க சைவமன்றம் ஒரு கழகமாக அங்கீகரிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட வேண்டும் என்று எம்பெருமானை வேண்டி பதிலுக்காக ஆவலுடன் காத்திருந்தனர்.

## கந்தன் கருணை காட்டிய கந்தசஷ்டி

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்.... என்று கந்தசஷ்டி கவசத்தை, ஸ்ரத்பீல்ட் மகளிர் உயர் பள்ளியில் 8.11.1986 அன்று நடைபெற்ற கந்தசஷ்டி விழாவில் முருகன் அடியார்கள் பாட, பக்தி வெள்ளம் அங்கு கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. இதற்கு முன்னோடியாக சைவ மன்றத்தை ஒரு கழகமாக அங்கீகரித்து பதிவுசெய்யப்பட்ட தகவல் விழாவுக்கு இரண்டு நாட்கள் முன்பாக, கந்தசஷ்டி நாளான 6.11.1986 அன்றே கிடைத்தது உண்மையில் கந்தனது கருணையே. இந்த நிகழ்ச்சியை ஒரு நல்ல சகுனமாக அனைவரும்

கருதினர். முருகப்பெருமானின் அருளாட்சி சிட்னியிலே நடக்கத்தான் போகின்றது என்னும் நம்பிக்கை வரப்பெற்ற நிர்வாகக்குழுவினர் ’சிட்னியிலே முருகன் கோயில் கொள்ள வேண்டும்’ என்று மன்றாடி, இரந்து, பாடி வழிபடுவதற்கு உகந்த ஒரு பக்திப்பாடல் எழுதும்படியும் அதனை கந்தசஷ்டி விழாவில் அடியார்கள் பாடவேண்டும் என்றும் கேட்டதற்கு இணங்க. சிட்னி முருகப்பெருமானின் அருள் துணை நிற்க ‘அரோகரா அரோகரா’ என்று ஆரம்பிக்கும் சிட்னி முருகன் புகழ்மாலை எழுதப்பட்டு அவன் திருவடிகளுக்குச் சமர்ப்பணம் செய்யப்படட்டது.

செந்தமிழர் சேவிக்கும் சேவற் கொடியோய்
சைவர்கள் நாம் சரணடைந்தோம் அரகரோகரா
சிட்னியிலே கோயில்கொள்வீர் கோலமுருகா
காலாகாலம் தொழஅருளும் தோகைமயிலா

என்று முதன் முறையாக அன்றைய கூட்டுவழிபாட்டில் அனைவரும் பாடி முருகனை வழிபட்டார்கள். அன்று கந்தசஷ்டியில் கருணை காட்டிய கந்தன், என்றும் எம் கருணைத் தெய்வமாக சிட்னியில் விளங்குவான் என்பது திண்ணம்.

## சிட்னி முருகன் கோயிற் திருப்பணி ஆரம்பம்

கோளிலிப் பெருங் கோயிலுளானைக் கோலக் காவினிற் கண்டு கொண்டேனே என்று பாடினார் சுந்தரமூர்த்தி நாயனார். சைவமன்றமோ 1987ம் ஆண்டிலேயே சுமார் 12 ஆண்டுகளுக்குப் பின்னர் அமைய விருக்கும் கோயிலை சிட்னி வாழ் சைவப் பெருமக்களின் மனத்திரையில் கொண்டு வந்தது. சிட்னி முருகன் கோயில் நிறுவும் பணி வெற்றிகரமாக நிறைவேற முருகப்பெருமானுக்கு நடைபெறும் இலட்சார்ச்சனை வழிபாடு என்று பன்னிரண்டு மணி நேர வழிபாட்டு நிகழ்ச்சி ஒன்றினை 25.10.1987ஆம் ஆண்டு சைவமன்றம் நடாத்தியது. காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை மணிக்கு ஒரு குழு என்று மக்கள் திரள்திரளாக வந்து எம்பெருமானைத் தரிசித்து தமிழில் முருகன் பேராயிரம் போற்றி கூறி மலர் தூவி தீபாராதனை செய்து வழிபாடு செய்தார்கள்.

அன்று மாலோன் மருகன் மலர் மழையில் நனைந்து, மலர் மலையில் நின்ற காட்சியை இன்றும் பலர் நினைவு கூர்வார்கள் என்பதில் ஐயமில்லை. சிட்னியிலும் தான் ஒரு வண்ண மலர்ச்சோலை சூழ் குன்றில் தான் குடி கொள்வேன் என்று அப்பொழுதே காட்டிய குறிப்பு எம்சிற்றறிவுக்கு அன்று எட்டாமல் போய் விட்டது.

## தேடித்தேடி வாடியிருக்க நாடிவந்த வைகாசிக்குன்று

முருகப்பெருமானின் திருவுருவச் சிலையை பெட்டியில் வைத்து மண்டபம் மண்டபமாக கொண்டு சென்று, வைத்து வழிபடாது எங்காவது நிரந்தரமாக வைத்து வழிபடவேண்டும் என்று முருக பக்தர்கள் அனைவருமே ஒருமனதாக விரும்பினார்கள். காணி, வீடு தேவாலயம், போன்ற எதுவாக இருந்தாலும் அதனை வாங்கி ஆவன செய்து, எம்பெருமானை நிரந்தரமாக அமர்த்தி விடவேண்டும் என்று கொன்கோட் முதல் றவுஸ் கில், டூன்சைட் வரையான இடங்கள் வரை ஓர் இடத்தை தேடி அலைந்தோம். காணி வாங்குவதற்கு போதிய பணம் இல்லாமல் இருந்ததும், காணியை வாங்கியபின் நாம் விரும்பியபடி வழிபாட்டு நிலையத்தை அமைக்க அவ்விடத்து நகரசபை அனுமதி தருமா? என்பதும் பல சந்தர்ப்பங்களில் ஒரு முடிவு எடுக்க முடியாமல் எங்களைத் தடுத்து வந்தன.

இந்நிலையில் 1990ஆம் ஆண்டில் தற்போதைய கோயிற் காணியை வீதிகள் போக்குவரத்துச் சபையிடம் (RTA) இருந்து, அதனில் வழிபாட்டு நிலையம் கட்டுவதற்குரிய அபிவிருத்தி விண்ணப்பம் Holroyd Council இனால் அங்கீகரிக்கப்பட்டால் மட்டும் தவணை முறையில் பணம் கட்டி வாங்குவதற்குரிய வாய்ப்பு கிட்டியது. இதற்கு Ethnic Affairs Commission தனது பூரண ஆதரவை நல்கியது. எங்கெங்கெல்லாமோ தேடி எதுவுமே சரிவராத நிலையில் இப்படியொரு அருமையான சந்தர்ப்பம் வரவே அதனை நழுவவிடக்கூடாது என்று அக்காணியை வாங்க சைவமன்றம் தீர்மானித்தது. வீதிகள் போக்குவரத்துச் சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அக்காணியில் சிட்னி முருகன் கோயிலும், தமிழ்க் கலாச்சார கல்வி நிலையமும் கட்டுவதற்குரிய திட்டமிடல் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இந்தக் கடினமான காலகட்டத்தில் க. சந்திரன் அவர்கள் மன்றத்தின் தலைவராக இருந்து செவ்வனே பணியாற்றினார்.

இந்த இடத்தின் பெயர் ஆங்கிலத்தில் **Mays Hill** ஆகும். சுற்றாடலுடன் ஒப்பிடும் போது இது ஓர் உயர்வான இடமாகும் குன்றிருக்கும் இடமெல்லாம் குடிகொண்ட குமரனுக்கு சிட்னியிலும் வைகாசிக் குன்று இருப்பிடமாக வந்தமைந்த விந்தை கண்டு சைவப் பெருமக்கள் எல்லோரும் வியந்து போனார்கள்.

## சிட்னி முருகன் செய்தி மடல் மலர்ந்தது

சைவமன்றம் பல பணிகளை மேற்கொண்டபோது அவைபற்றி அங்கத்தவர்களுடனும் அடியார்களுடனும் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு ஒரு ஊடகம் தேவைப்படுவதன் அவசியத்தை உணர்ந்தது. இதன் பொருட்டு ஒரு செய்தி மடலை வெளியிடத் தீர்மானித்தது. ஸ்ரத்பீல்ட் நோர்த் பப்ளிக் பள்ளியில் 6.6.1993 அன்று நடைபெற்ற வைகாசி விசாக விழாவில் சிட்னி முருகன் செய்தி மடலின் முதலாவது இதழ் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. அன்று முதல் இந்தச் செய்தி மடல் காலாண்டுக்கு ஒரு முறையாக வெளிவர ஆரம்பித்தது.

## வைகாசிக் குன்றில் அரோகரா ஓசை

பல்லாண்டு காலமாக வைகாசிக் குன்றில் ஒலிக்கவிருக்கும் அரோகரா ஓசை முதன் முறையாக 22.1.1994 சனிக்கிழமை காலை அங்கு ஒலித்தது. கோயிற் காணி புனிதமாக்கும் பூசையில் கலந்து கொண்ட பெருந்திரளான பக்தர்களே இவ்வாறு அரோகரா கோஷம் எழுப்பி சிட்னி முருகனை வழிபாடு செய்தார்கள். காணியில் தற்காலிகமாக அமைக்கப்பெற்ற கூடாரத்தில் எம்பெருமானை எழுந்தருளச் செய்து பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள் தலைமையில் பூமி புனிதமாக்கும் பூசை நடைபெற்றது. இந் நிகழ்ச்சியினை அப்போது சைவமன்றத் தலைவராக இருந்த நா. மகேசன் அவர்கள் சிட்னி வாழ் சைவப்பெருமக்கள் சார்பில் முன்னின்று நடாத்தினார்.

அக்காணியில் சிட்னி முருகன் கோயிலும், தமிழ்க் கலாச்சார கல்வி நிலையமும் கட்டுவதற்கு **Holroyd Council** இன் அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து, முதலில் தமிழ்க் கலாச்சார கல்வி நிலையத்தைக் கட்டி அதனில் எம்பெருமானை வைத்து வழிபடுவோம் என்னும் எண்ணத்துடன் வேலைகள் ஆரம்பமாகின.

## அருள் மழை பொழிய அடிக்கல் நாட்டினோம்

சமய மரபுக்கு அமைய ஆன்மீக ரீதியில் (spiritually) கோயிற் காணியை தூய்மைப்படுத்துவதற்காக நடைபெற்றதே பூமி புனிதமாக்கும் பூசையாகும். அதனைத் தொடர்ந்து சிட்னி முருகன் கோயிலுக்கும் தமிழ்க் கல்வி கலாச்சார நிலையத்திற்கும் 9.9.1994 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அன்று அதிகாலை முதல் வானம் பளிச்சென நீலநிறத்துடன் இருந்தது. திடீரென அது கருமேகங்களால் சூழப்பெற்றுப் பெருமழை பொழியத் தொடங்கியது. அத்திவாரக் கிடங்குகள் உட்பட முழுக் காணியுமே மழை நீரால் கழுவப் பெற்றுத் தூய்மை பெற்றது. மனிதரால் இயலாத காரியம் இயற்கையால் செய்யப்பட்டது. அடிக்கல் நாட்டுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பாக மழை நின்று வானம் வெளுக்க ஆதவனும் தன் கதிரொளியைக் காட்டினான்.

இந்நிகழ்ச்சி எம்பெருமான் தன் கருணையையும் ஆசீர்வாதத்தையும் இத்திருப்பணிக்கு வழங்கியது போன்று அமைந்தது. அங்கு கூடியிருந்த அடியார்கள் இது வான் மழையன்று வேலவன் தன் அருள் மழையே என்று கந்தன் புகழ்பாடி அவன் கருணையில் நனைந்து பக்தி வெள்ளத்தில் மிதந்த வண்ணம் சிட்னி முருகன் கோயிலுக்கும் தமிழ்க் கல்வி கலாச்சார நிலையத்திற்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

வீதிகள் போக்குவரத்துச் சபையுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி 01.11.1994இல் வட்டியுடன் முழுக் கடனும் செலுத்தி முடிக்கப்பட்டது. அன்று வைகாசிக் குன்று சைவர்கள் சொத்தாகியது.

## தமிழ்க் கலாமண்டபம் கொண்ட குமரன்

சிட்னி முருகனை 1995ம் ஆண்டு தமிழ்ப் புதுவருடத்தில் தமிழ்க் கலாச்சார கல்வி நிலையத்தில் பிரதிஷ்டை செய்யும் நோக்கத்தோடு கட்டிடவேலைகள் துரிதகதியில் நடைபெற்றன. இந்தியாவிலிருந்து சித்திவிநாயகர், நடராஜர், சிவகாமசுந்தரி ஆகிய உற்சவமூர்த்திகள் வரவழைக்கப்பட்டன. தமிழ்ப் புதுவருடப் பிறப்பு தினமான 14.4.1995 வெள்ளிக்கிழமை தமிழ்க் கலாச்சார கல்வி நிலையத்தில் சித்திவிநாயகர், நடராஜர், சிவகாமசுந்தரி ஆகிய உற்சவ மூர்த்திகள் உட்பட நாம் இதுவரை வழிபட்ட சிட்னி முருகனுக்கும் பிரதிஷ்டை வைபவம் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து திருக்கல்யாணம், சங்காபிஷேகம், திருவிளக்குப் பூசை, இலட்சார்ச்சனை அபிஷேகம் என்பன நடைபெற்றன. அப்போது சைவமன்றத் தலைவராக இருந்த தா. சிவசுப்பிரமணியம் அவர்கள் சிட்னி வாழ் சைவப்பெருமக்கள் சார்பில் இந்த பிரதிஷ்டை வைபவத்தை முன்னின்று நடாத்தினார்.

## அடியார்களின் அதிகரிப்பும் ஆலயத்தின் விரிவும்

தமிழ்க் கலாச்சார மண்டபத்தில் வீற்றிருக்கும் குமரனின் புகழும், அருளும் அடியார்கள் மத்தியில் பரவ அவனைத் தரிசிக்க வரும் அடியார்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரிக்க ஆரம்பித்தது. சில வெள்ளிக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும் மண்டபம் நிரம்பி வெளியிலும் பெரும் பக்தர்கள் கூட்டம் நின்று வழிபடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அந்நிலையில் 1996ஆம் ஆண்டு கோயிற் காணிக்கு அடுத்த காணியையும் சைவமன்றம் வாங்கக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவானது. ஆனால் சைவமன்றமோ அக்காணியை வாங்குவதற்குரிய பணமோ, கோயிலைக் கட்டி

முடிப்பதற்குரிய பணமோ இல்லாத நிலையில் இருந்தது. அடியார்களின் ஆதரவையும், முருகனின் அருளையும் நம்பி அக்காணியை வாங்குவது என்னும் துணிச்சலான ஒரு முடிவை சைவமன்றம் எடுத்தது. அவ்வேளையில், சுந்தர் ஈஸ்வரன் அவர்களின் தலைமையில் இயங்கிய சைவமன்ற நிர்வாகக்குழு இக் காணியைக் கடன் பெற்று கொள்வனவு செய்வதில் அரும் பணியாற்றியது. கோயிற் கட்டிட வேலைகள் ஆரம்பமாகி, 1996ஆம் ஆண்டின் இறுதியில் கோயிலின் அடித்தள வேலைகள் (foundation) நிறைவுற்றன.

## தமிழகத்தில் புனைந்த சிட்னி முருகன் பாமாலை

சிட்னி முருகன் பாமாலையின் முதற்பதிப்பு வெளியான நிகழ்ச்சியை அறியின் அங்கும் எம்பெருமான் நிகழ்த்திய திருவிளையாடல் ஒன்றினைக் கண்டு முருகன் அடியார்கள் மெய்சிலிர்ப்பார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் கே. ஜி. கண்ணப்பனும் அவரது பாரியாரும் சிட்னி முருகன் பாமாலையினை 1989ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சென்னை சைவ சித்தாந்த கழகத்தில் பதிப்பித்து ஓராயிரம் பிரதிகளை சைவமன்றத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். இவர்கள் இருவரும் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் ஒன்றினை நிறைவு செய்து கொண்டு தமிழகம் புறப்படும் இறுதி நாளான வெள்ளிக்கிழமை சிட்னி முருகப் பெருமானுக்கு வெள்ளிதோறும் நடைபெறும் வாராந்த வெள்ளிக்கிழமை கூட்டுவழிபாடு பற்றி கேள்விப் பட்டார்கள். வெளிநாடு ஒன்றில் வேலவனுக்கு தமிழில் பாமாலை பாடி, அர்ச்சனை செய்து வழிபாடு செய்யும் அற்புதக்காட்சியைக் காணாமல் செல்கிறோமே என்று மனம் வருந்தியபடி விமான நிலையத்திற்கு சென்றார்கள். அடியவர் துயர் துடைக்க கடுகதியில் வரும் குமரன் அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்ய நினைத்தனன் போலும். அவர்கள் பயணம் செய்யவிருந்த விமானம் அன்று புறப்படாது மறுநாளே புறப்படும் என்று விமான நிலையத்தில் அறிவிக்கப்பட்டது. மட்டற்ற மகிழ்ச்சியுடன் அங்கிருந்து நேரடியாக ஸ்ரத்பீல்ட் மகளிர் உயர் பள்ளிக்கு விரைந்து வந்தார்கள். சிங்கார முருகனுக்கு அங்கு செந்தமிழில் நடைபெற்ற வழிபாட்டைக் கண்டும், அவன் தங்கள் மனக்குறை தீர்த்து அவ்வழிபாட்டில் கலந்துகொள்ள வைக்க நடாத்திய திருவிளையாடல் கண்டும் மெய்யுருகிப் போனார்கள். அன்று நாம் புத்தகங்களிலிருந்து பாடல்களை பிரதிசெய்து பாவித்ததை அவதானித்தார்கள். அந்நேரமே சிட்னி முருகன் பாமாலை ஒன்றினை பிரசுரிக்கும் எண்ணம் அவர்கள் மனதில் எழுந்தது. இந்நூல் தமிழகத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களினால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது சைவமன்றம் செய்த பாக்கியமாகும்.

சிட்னி முருகன் பாமாலையின் இரண்டாம் பதிப்பு மேலும் புதுப் பொலிவுடன் அப்போதைய சைவமன்றத்தின் தலைவராக இருந்த வி. ஈழலிங்கம் அவர்களினால் 1997ம் ஆண்டில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

## மூலவர் அமர கருவறை உருவானது

இதுவரை காலமும் நிலத்திற்கு கீழும் நிலமட்டத்துடனும் நடைபெற்ற வேலைகள் நிறைவுற்று தரைக்கு மேலான கட்டிட வேலைகள் 21.4.1997இல் ஆரம்பமாகின. சித்தி விநாயகர், முருகன், சிவன், சிவகாமசுந்தரி, வள்ளி தெய்வயானை சமேத முருகன், ஆகியோர் எழுந்தருளவுள்ள கருவறைகளின் கட்டிட வேலைகள் ஆரம்பமாகின. வாழ்நாளில்

எல்லோருக்கும் கிடைக்காத இவ்வரிய வாய்ப்பு எமக்கு கிடைத்ததே என்று எம்பெருமானை வாழ்த்திய வண்ணம் அடியார்கள் செங்கற்களை கருவறைச் சுவர்களில் வைத்து கோயிற் கட்டிடத் திருப்பணியில் ஈடுபட்டு உளம் மகிழ்ந்தனர். இதனைத் தொடர்ந்து கோயிற் கட்டிட வேலைகள் துரிதகதியில் நடைபெற்றன. ராஜகோபுர வேலைகள் 1999ம் ஆண்டு தைப்பூச நாளில் ஆரம்பமாகியது. இதே வேளையில் புகழ்பெற்ற கோயிற் கட்டிடக் கலைஞரான முத்தையா ஸ்தாபதி அவர்களினால் கருவறைகளில் அமரவுள்ள விக்கிரகங்களும் தமிழகத்தில் அழகாக உருவாகிக் கொண்டிருந்தன.

## கும்பாபிஷேகம்

தமிழகத்திலிருந்து கடல் மார்க்கமாக விக்கிரகங்கள் சிட்னியை வந்தடைந்தன. கோபுரம் உட்பட கோயிற் கட்டிட வேலைகளும் நிறைவுறும் நிலையை நெருங்க, மகாகும்பாபிஷேகத்தை நடாத்துவதற்குரிய பணிகள் ஆரம்பமாகின. அருள்மிகு சிட்னி முருகப் பெருமானின் மகாகும்பாபிஷேகம் பிரமாதி ஆண்டு ஆனி மாதம் 3ம் நாள் (17.6.1999) வியாழக்கிழமை, சதுர்த்தித் திதி, பூச நட்சத்திரம் கூடிய சுபயோக சுபநாளில் காலை மணி 10.45க்கு மேல் 11.30 மணிக்குள் சிம்மலக்கினத்தில் நடைபெற முருகப் பெருமானின் திருவருள் கூடியது.

இந்நிலையை சைவமன்றம் அடைவதற்கு தங்களால் இயன்ற பலவழிகளில் உதவிய அடியார்களின் தொகை எண்ணில் அடங்காது. உள்நாட்டு, வெளிநாட்டு கலைஞர்கள் வழங்கிய பல கலைநிகழச்சிகள் முதல், இன்னும் எத்தனையோ வழிகளில். கோயில் கட்ட நிதி சேர்க்கப்பட்டது. இறைபணியில் துணைநின்ற எல்லோருக்கும் சிட்னி முருகப் பெருமானின் திருவருள் கிட்ட எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

## அழகன் முருகனின் எழில் மிகு ஆலயம்

வைகாசிக்குன்றில் குமரன் குடிகொண்டுள்ள கோயிற் காணியின் அளவு 11000 சதுர மீற்றர்களாகும். அவன் அமர்ந்துள்ள ஆலயத்தின் நீளம் 37 மீற்றர்கள். அகலம் 21 மீற்றர்கள். பிரபல ஸ்தபதி நாகராஜா அவர்களின் தலைமையில், இந்திய சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவான சிட்னி முருகன் கோயில் இங்குள்ள சைவப்பெருமக்களின் சொத்தாகவும், அடையாளச் சின்னமாகவும் விளங்கும். பளிங்கு போல் தரையும். திரும்புமிடமெல்லாம் தெரியும் கவின்மிகு கலைநுட்பக் கோலங்களும், சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த விமானங்களும், சேலத்தில் செய்த தேக்குமர மணிக் கதவுகளும் கோயிலுள் புகுந்தவுடன் அடியவர் மனங்களைக் கவர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கோயிலினுள் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த ஐந்து கருவறைகள் உள்ளன. வலப்புறம் உள்ளது வினைதீர்க்கும் சித்தி விநாயகருக்குரியது. இடப்புறம் உள்ளது வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகனுக்குரியது. மத்தியில் இணைந்திருக்கும் மூன்று கருவறைகளில் வலப்புறம் அப்பன் சிவலிங்க வடிவிலும், இடப்புறம் அம்மை சிவகாமசுந்தரி வடிவிலும், இருக்க நடுநாயகமாக மைந்தன் சிட்னி முருகன் எழுந்தருளியுள்ள காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

கோயிலினுள் நவக்கிரகங்கள், வயிரவர், சண்டேஸ்வரர்களுக்கும் சந்நிதிகள் உண்டு. மேலும் கோயிலினுள் அழகான பல அலங்காரத் தூண்கள் உள்ளன. அவற்றில் மாமல்லபுர சிற்பி திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களின்

கைவண்ணத்தில் உருவான ஆறுபடை வீடுகொண்ட முருகனின் ஆறு திருவுருவச் சிலைகளும், ஈழநாட்டின் திருத்தலங்களான கதிர்காமம், செல்லச்சந்நிதி, வெருகலம்பதி, நல்லூர் எனபனவற்றில் எழுந்தருளியுள்ள முருகனின் நான்கு திருவுருவச் சிலைகளும் அமைந்துள்ள காட்சி அற்புதக் காட்சியாகும். சிறந்த கலைநுட்ப வேலைப்பாடுகள் மிகுந்த வசந்த மண்டபத்தில் இதுகாறும் நாம் வழிபட்ட உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் காட்சி காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளும்.

இவை எல்லாவற்றையும் காண்பதற்கு முன்பு, கோயிலினுள் நுழைவதற்கு முன்பு நாம் காண்பது சுமார் 12 மீற்றர்கள் உயரமுடைய ராஜகோபுரமாகும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள் அதை நினைவூட்டும் வகையில் கண்கவர் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த இக்கோபுரம் கம்பீரமாக வைகாசிக் குன்றில் காட்சியளிக்கின்றது.

வைகாசிக் குன்றில் அமைந்துள்ள சிட்னி முருகன் கோயில், சிட்னியிலே முருகப் பெருமான் தனது அருளாட்சியை நடாத்த தேர்ந்தெடுத்த இடமாகும். அங்கு நாடினோரை அவன் வாழவைப்பான். வேண்டும் வரமளிப்பான்.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்.

இந்தக் கட்டுரை சிட்னி முருகன் கோயில் 1999ஆம் ஆண்டு சிட்னி முருகன் கோயில் கும்பாபிஷேக மலரில் பிரசுரமானது. திரு. து. பவராஜா 1999ஆம் ஆண்டு சைவமன்றத்தின் உபதலைவராக இருந்தவர்.

## 1999க்குப் பின்னர் நடைபெற்ற முக்கியம் வாய்ந்த நிகழ்வுகள்

2000இல் முதலாவது மகோற்சவம் திரு. தணிகைஸ்கந்தகுமார் தலைவராக இருந்த போது பங்குனி உத்தரத்தைத் தீர்த்த நாளாகக் கொண்டு நடைபெற்றது. இதற்காகக் கோயிலில் கொடித்தம்பம் ஏற்படுத்தப்பட்டது. திருவிழாவிற்கு கைலாயமலை, குதிரை, ஆடு, யானை, எலி ஆகிய வாகனங்கள் பெறப்பட்டன.

2001இல் கோயிலுக்கு அருகாமையிலுள்ள வீட்டுடன் கூடிய காணி ஒன்று திரு. ந. கணபதிப்பிள்ளை தலைவராக இருந்த போது வாங்கப்பட்டது. அத்துடன் புதிய சூரனும் தருவிக்கப்பட்டது. சிட்னி முருகன் அறிவுக் களஞ்சியம் இக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

2001இல் சிட்னி முருகன் கோயிலை எல்லையாகக் கொண்ட வீட்டுடன் கூடிய காணி ஒன்று திரு. வை. சிவாஜி தலைவராக இருந்த போது வாங்கப்பட்டது. 2002 பங்குனி மாதம் உற்சவத்திற்கு முன்னர் சிட்னி முருகன் கோயிலில் உற்சவமூர்த்தியாக ஆறுமுகசுவாமி வள்ளி, தெய்வயானை சமேதரராய் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அத்துடன் சண்டேஸ்வரரும் தருவிக்கப்பட்டது. சிம்ம வாகனம், காராம்பசு ஆகிய வாகனங்களும் செய்யப்பட்டன.